# Where Ink Tides Meet

நடைபெற்றுவரும், சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் மை பற்றிய ஆராய்ச்சியை, *மை அலைகள் எங்குச் சந்திக்கின்றன* எனும் கண்காட்சி அடித்தளமாகப் பயன்படுத்துகிறது. உருநிலை மாற்றக்கூடிய, மை ஓவியம் என்பது என்பது மரபுகள், வரலாறுகள் மற்றும் ஒவ்வோர் ஓவியரின் குறிப்பிட்ட படைப்புத் தூண்டுதல்களால் வடிவமைக்கப்பட்ட ஒரு வாழும் கலையாகும், அதன் தாக்கம் பண்பாட்டு மற்றும் உலகியல் எல்லைகளுக்கு அப்பால் நீண்டு, பொருளுணர்த்தலின் புதிய வழிகளைத் திறக்கிறது.

மறுமலர்ச்சி, நேர்கொள்ளல் மற்றும் பன்முனை கூடுநடுவம் (Nexus) ஆகிய கருப்பொருள்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட இக்கண்காட்சி, கலைக்கூடத்தின் அண்மைய கையகப்படுத்தல்களால் பெரும்பாலும் ஈர்க்கப்பட்டு, தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த பல்வேறு பண்பாட்டுப் பின்னணிகளைச் சேர்ந்த ஓவியர்களின் படைப்புகளைக் கொண்டுள்ளது, இது பல்வேறு மரபுகளின் குறுக்காக மை கொண்டிருந்த நீட்சியையும் தகவமைப்புத் தன்மையையும் பிரதிபலிக்கிறது. வளைந்த சுவர்கள், மதிநுட்பமான திறப்புகள் மற்றும் பல பார்வைக் கோடுகளைக் கொண்ட இக்கண்காட்சியின் இடஞ்சார்ந்த வடிவமைப்பு, மையின் நீர்மத்தன்மை மற்றும் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கிறது, மேலும், பார்வையாளர்களை அவர்களின் சொந்தக் கண்ணோட்டத்தில் மையைப் பிரதிபலிக்கவும், அலையவும், எதிர்கொள்ளவும் அழைக்கிறது.

மையோவியத்தில் கவனம் செலுத்துவதன் மூலம், இக்கண்காட்சி, படைப்பு, கூட்டுப்பணி மற்றும் நேர்கொள்ளல் ஆகியவற்றின் செயல்கள் ஒற்றுமையில் இணைவது பற்றியது அன்று என்றும் மாறாக அவை பன்முகத்தன்மையின் வெளிப்பாடு பற்றியவை என்றும், அங்கே மரபுகள் மறுக் கண்டுபிடிப்பு மூலம் உயிர்ப்புடன் இருக்கும் என்றும், மேலும் புதிய பொருட்கொள்ளல்கள் வெளிப்படுகின்றன என்றும் வெளிப்படுத்துகிறது,

**மறுமலர்ச்சி**

19 ஆம் நூற்றாண்டிலிருந்து, சிங்கப்பூர் பண்பாடு மற்றும் கலைப் பரிமாற்றத்தின் கடப்புச்சாலையாக இருந்து வருகிறது, பல ஓவியர்கள் இப்பகுதி வழியாகக் குடியேறினர் அல்லது கடந்து சென்றனர். அவ்வோவியர்கள், வண்ணம் தீட்டிகள், அழகெழுத்தர்கள், எழுத்தாளர்கள், கற்பிப்பவர்கள் மற்றும் பண்பாட்டுத் தலைவர்கள் என பல்வேறு தளங்களில் பணிபுரிந்தபோதிலும், உள்ளூர்ச் சூழலில் ஈடுபட்டிருந்தாலும் தங்களது மரபுகளுடன் தொடர்பிலேயே இருந்தனர். தங்கள் மை வேலைமுறைகள் மூலம், பலர் தங்கள் கலை வேர்களை மீண்டும் பார்வையிட்டனர், பழக்கமான மரபுகளைப் பற்றிச் சிந்தித்து அவற்றை மறுபொருள்விளங்கினர். அத்தகைய ஓர் ஓவியரான கூ சியோக் வான், தனது படைப்புகள் வழியாகவும் சக அறிஞர்களுக்கு ஆதரவளிப்பதன் வழியாகவும் இலக்கியவாதிகளின் நிறைநற்பண்புகளை வெளிப்படுத்தினார், மை வேலைமுறையை ஒரு பகிரப்பட்ட பண்பாட்டு முயற்சி மற்றும் தனிப்பட்ட வெளிப்பாடாகக் கருதினார். போர், மட்டான ஆவணப்படுத்தல்கள் அல்லது கலை முன்னுரிமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக, இந்த மை ஓவியர்களின் பல முயற்சிகள் கவனிக்கப்படாமல் போய்விட்டன. இப்பிரிவு அவர்களின் பங்களிப்புகளை மீட்டெடுக்கிறது, மையின் மறுமலர்ச்சியில் ஒரு புதுப்பிக்கப்பட்ட பார்வையை வழங்குகிறது.

சென் ஜென் ஹாவோ
(பிறப்பு 1908, சீனா; இறப்பு. 1976, சிங்கப்பூர்)
கனவிலிருந்து முதலில் விழித்தெழுபவர் யார்

1943
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2025-00037

சீனத் தத்துவஞானி ஜுவாங்சியின் (சுமார் கி.மு. 4 ஆம் நூற்றாண்டு) புகழ்பெற்ற உவமையிலிருந்து வரையப்பட்ட இப்படைப்பின் தலைப்பு, பார்வையாளரை மெய்ந்நிலை, மாயை மற்றும் விழித்திருக்கும் நிலைக்கு இடையிலான எல்லைகளைக் கேள்வி கேட்கத் தூண்டுகிறது.

இப்படைப்பு உட்பட சென் ஜென் ஹாவோவின் தொடக்கக்காலப் படைப்புகள், மரபியல் மை நுட்பங்களில் அவர் கொண்டிருந்த அடித்தளத்தையும், மேற்கத்திய புதுப்பாணியியல் கருத்துக்களை வடிவம் மற்றும் வண்ணத்தில் ஒருங்கிணைப்பதற்கான அவரது முயற்சிகளையும் வெளிப்படுத்துகின்றன. அவரது அமைதியான, நம்பிக்கையான தூரிகை வேலைப்பாடு, அவரது பூனைத் தலைப்புப்பொருள்களையும் அவற்றின் சுற்றுப்புறங்களையும் ஒரு சில படிகளில் படம்பிடிக்கிறது. ஷாங்காய் மற்றும் பாரிஸில் பயிற்சி பெற்ற சென், 1932 இல் சீனாவுக்குத் திரும்பி 1937 இல் ஏற்பட்ட ஜப்பானியப் படையெடுப்பு வரை கற்பித்தார். பின்னர் அவர் மூவரிலும் (Muar), இறுதியாக சிங்கப்பூரிலும் குடியேறினார்.

போர்க்கால மலாயாவின் கொந்தளிப்பின் போது உருவாக்கப்பட்ட இவ்வோவியம், பின்னர் 1946 ஆம் ஆண்டு *'சுங் நான் டெய்லி நியூஸ்'* நாளிதழில் இடம்பெற்றது, இஃது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சிங்கப்பூரில் நடைபெற்ற முதல் ஓவிய நடவடிக்கைகளில் ஒன்றான சீன ஓவியர்கள் சங்கத்தின் 6 வது கண்காட்சியை நினைவுகூரும் வகையில் இடம்பெற்றது.

லியு காங்
(பிறப்பு 1911, சீனா; இறப்பு. 2004, சிங்கப்பூர்)

சென் சோங் ஸ்வீ
(பிறப்பு 1910, சீனா; இறப்பு. 1985, சிங்கப்பூர்)
[தலைப்பிடவில்லை] (சிலந்தியும் பூக்களும்)

1947
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2025-00040

லியு காங் மற்றும் சென் சோங் ஸ்வீ ஆகியோரின் கூட்டுமுயற்சியால் உருவான இந்த மை ஓவியம், ஆசிய இலக்கியவாதிகளிடையேயான கலைப் பரிமாற்றங்கள் போன்ற ஒரு கூடுகையில் தன்னியல்பாகத் தொடங்கியது. இரண்டு ஓவியர்களும் ஷாங்காயின் சின்ஹுவா ஓவியப் பள்ளியில் பயிற்சி பெற்றனர், அங்கு அவர்கள் ஓவியத்தில் சீர்திருத்தக் கருத்துக்களை அறிமுகப்படுத்தினர்.

இங்கே, லியு மந்தாரைப் பூக்களுக்குத் (orchids) பளபளப்பான மையையும் விரைவான தூரிகை வேலைப்பாடுகளைப் பயன்படுத்துகிறார், அதே நேரத்தில் சென் சிலந்தியையும் அதன் வலையையும் நுட்பமான, நேரியல் தூரிகையடிப்புகளுடன் சித்தரிக்கிறார். மாறுபட்ட தூரிகை வேலைப்பாட்டுப் பாணிகள் மற்றும் வழக்கத்துக்கு மாறான தலைப்புப்பொருள்களுடன் கூடிய மூலைவிட்டக் கோர்ப்பின் புத்திசாலித்தனமான கலவை, சாங் வம்சத்தின் புகழ்பெற்ற "'மா'வின் ஒரு மூலை" கோர்ப்பையும், லிங்னான் பள்ளியின் காவ் ஜியான்ஃபுவின் மலர்-மற்றும்-பறவை ஓவியங்களையும் நினைவூட்டுகிறது. இப்படைப்பு பின்னர் லியுவின் தனிப்பட்ட சேகரிப்பில் சேர்க்கப்பட்டது.

கூ சியோக் வான்
(பிறப்பு 1874, சீனா; இறப்பு 1941, சிங்கப்பூர்)
[தலைப்பிடவில்லை] (ஓர் அறிஞரின் பாறையில் மந்தாரைப் பூக்கள்)

சுமார் 1896–1940
காகிதத்தில் மை

கூ சியோக் வானின் சந்ததியினரான ஓங் செங் கியான் மற்றும் குடும்பத்தினரின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2022-00463

கூ சியோக் வானின் படைப்புகள் சிங்கப்பூரில் இலக்கியவாதிகள் அல்லது அறிஞர்-ஓவியர் ஓவியங்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். மந்தாரைப் பூக்கள் மற்றும் அறிஞர் பாறைகள் மேன்மைத்தன்மை மற்றும் மீள்தன்மை போன்ற நற்பண்புகளைக் குறிக்கின்றன. கூ ஒரு சிறந்த அறிஞர் மற்றும் கவிஞர் ஆவார். அவர் சீனக் குடிமைப்பணித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று 'ஜூரன்' (பரிந்துரைக்கப்படுபவர்) என்ற பட்டத்தைப் பெற்றார், அஃது அவரை ஒரு மரியாதைக்குரிய அறிஞராகக் குறித்தது. கூ அரசியலிலும் பண்பாட்டியலிலும் தீவிரமாக இருந்தார்: 1898 ஆம் ஆண்டு சீனாவில் நடந்த நூறு நாள்கள் சீர்திருத்த இயக்கத்திற்கு நிதியுதவி அளித்தார், மேலும் சீர்திருத்தத் தலைவர்களில் ஒருவரான காங் யூவேயை சிங்கப்பூரில் தங்க வைப்பதற்கும் நிதியுதவி செய்தார். அவர் கலைகளை ஊக்கப்படுத்துவதிலும், கவிதைச் சங்கங்கள் மற்றும் கலைக் கழகங்களை பிறருடன் இணைந்து நிறுவுவதிலும் தீவிரமாக இருந்தார், அதற்கொரு எடுத்துக்காட்டு நான்யாங் அழகெழுத்து மற்றும் ஓவியச் சங்கம் (1929 இல் நிறுவப்பட்டது) ஆகும்.

லீ ஹாக் மோ
(பிறப்பு 1947, சிங்கப்பூர்)
புலாவ் உபினுக்குச் சென்ற ஒரு பயணம் பற்றிய பதிவு

2021
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2024-01082

ஓரிடத்தை உங்கள் மனத்தில் தங்க வைப்பது எது? இப்படைப்பில், லீ ஹாக் மோஹ், புலாவ் உபினின் அமைதியான கவர்ச்சியை தோற்றுவிப்பதற்காக நினைவு, நெருக்கமான கவனிப்பு மற்றும் கற்பனை ஆகியவற்றைப் பயன்படுத்துகிறார். இடதுபுறத்தில் கவனமாக வரையப்பட்ட, முறுக்கேறிய மரத்தின் காட்சியை வடிவமைத்து, பார்வையாளரின் பார்வையை உள்நோக்கி வழிநடத்துகிறார். மரபான ஷென்யுவான் (ஆழமான தொலைவு) பார்வைக்கோணம் மற்றும் மென்மையான மை மற்றும் வண்ணக் கழுவல்கள் சுற்றுச்சூழலையும் இடஞ்சார்ந்த ஆழத்தையும் மேம்படுத்துகின்றன.

1960களின் பிற்பகுதியில் நன்யாங் நுண்கலைக் கழகத்தில் சீ ஹியாங் டோ (1906–1990) மற்றும் சென் சோங் ஸ்வீ ஆகியோரின் கீழ் லீ பயிற்சி பெற்றார். பூ-மற்றும்-பறவை ஓவியங்களில் *கோங்பி (gongbi)* (நுணுக்கமான தூரிகை-மற்றும்-மை) நுட்பத்திற்கு மிகவும் புகழ்பெற்ற லீ, சீனக் குரு சென் ஜிஃபெனின் (1898–1976) படைப்புகளைப் படித்து அப்பாணியைக் கற்றுக்கொண்டார். இப்படைப்பு லீயின் கோங்பி-பாணியில் இயற்கை நிலக்காட்சி ஓவியத்தை வெளிப்படுத்துகிறது, 2000களுக்குப் பிறகு அவர் இத்திசையை ஆராயத் தொடங்கினார். இன்று, லீ சிங்கப்பூரில் ஒரு முன்னணி மை ஓவியராக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளார்.

**நேர்கொள்ளல்**

சிங்கப்பூரில், கண்காட்சிகள், ஓவியர் தொடர்புக் கண்ணிகள் மற்றும் கூட்டங்களே நீண்ட காலமாக உரையாடல் மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்கான முக்கியத் தளங்களாக இருந்து வருகின்றன - பெரும்பாலும் புதுக் கண்டுபிடிப்புகளாக உருவாகும் சந்திப்புகளை வளர்க்கின்றன, மேலும், பிராந்தியத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் ஓவியர்கள் மற்றும் சேகரிப்பாளர்களிடையே தொடர்புக் கண்ணிகளை வளர்க்கின்றன.

எடுத்துக்காட்டாக, சீன ஓவியர்கள் சங்கம், 1937 ஆம் ஆண்டிலிருந்தே வெளிநாட்டு ஓவியர்களை வரவேற்கும் நீண்டகால மரபைக் கொண்டிருந்தது. சங்கத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட குவான் ஷான்யூவின் [தலைப்பிடவில்லை] (ஒரு இந்தியப் பெண்மணி மற்றும் வெப்பமண்டல மரங்கள்) (1947) போன்ற படைப்புகள், பிராந்தியத்திற்கு அப்பால் நீண்டு செல்லும் அத்தகைய உறவுகளின் செழுமையைப் பிரதிபலிக்கின்றன. 20 ஆம் நூற்றாண்டின் சீன மைப் புதுப்பாணியியல் ஓவியர்களின் படைப்புகளைத் தேசியச் சேகரிப்புக்குப் பரிசளித்த தனியார் சேகரிப்பாளர்களின் தாராள மனப்பான்மையிலும் இந்த ஈடுபாட்டு உணர்வு தெளிவாகத் தெரிகிறது. இப்படைப்புகளில் வூ குவான்சோங்கின் ஓடுகிற நீரோடை (1988), லு யான்ஷாவோவின் [தலைப்பிடவில்லை] (இயற்கை நிலக்காட்சி) (1962) மற்றும் லி சியோங்க்காயின் பைன் (Pine) (1987) ஆகியவை அடங்கும், இவை சிங்கப்பூரில் பண்பாட்டுப் பரிமாற்றக் கதையை ஒன்றாக வளப்படுத்துகின்றன.

வு குவான்சோங்
(பிறப்பு 1919, சீனா; இறப்பு 2010, சீனா)
ஓடுகிற நீரோடை

1988
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

டாக்டர் ஹோ மற்றும் திருமதி ஹோ கீ ஹேங்கின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2017-00001

மெல்லிய, நடனமாடும் கிளைகளைக் கொண்ட அடர் கறுப்பு மரங்கள் ஓவியத்தின் முன்புறத்தை ஆக்கிரமித்துள்ளன. பின்னணியில், மெல்லிய நேரான தூரிகை வேலைப்பாடுகள் மூங்கில் தண்டுகள் நிமிர்ந்து நிற்பதைக் குறிக்கின்றன. அவற்றுக்கிடையே ஓர் ஓடுகிற நீரோடை உள்ளது. இடதுபுறத்தில் இருந்து பாயும் நீர், ஒரு பாறை மேலிருந்து ஒரு பரந்த நீரோடைப் படுகைக்குள் அருவியாக விழுகிறது. வூ குவான்சோங்கின் காட்டுத்தன்மை கொண்ட ஆனால் மென்மையான தூரிகை அசைவுகள், உயிரோட்டம் மற்றும் அமைதி ஆகிய இரண்டின் சூழலை உருவாக்கி, நீர், காற்று மற்றும் மழையின் இயக்கங்களைப் பின்பற்ற ஓவியத்தின் குறுக்கே கண்களை குறுக்காக வழிநடத்துகின்றன. இக்காட்சி சீனாவின் யுன்னானில் உள்ள பச்சைக்கல் நாகப்பறவைப் (Jade Dragon) பனிமலை என்றும் அழைக்கப்படும் யூலாங் மலையின் அடியில் உள்ள ஒரு காட்சியை நினைவுபடுத்துகிறது.

வூ, சீனாவைச் சேர்ந்த 20 ஆம் நூற்றாண்டின் மிக முக்கியமான ஓவியர்களில் ஒருவர். மேற்கத்திய மற்றும் சீன ஓவிய மரபுகளை எண்ணெய் மற்றும் மை ஓவியங்களில் ஒருங்கிணைக்கும் அவரது தனித்துவமான பாணிக்காக அவர் புகழ்பெற்றவர், ஹாங்க்சோ (Hangzhou) மற்றும் பாரிஸில் அவர் படித்தபோது அவருக்கு ஏற்பட்ட பரந்த அளவிலான தாக்கங்கள் காரணமாக அவர் அப்பாணியைக் கையாண்டார்.

குவான் ஷான்யூ
(பிறப்பு 1912, சீனா; இறப்பு 2000, சீனா)
[தலைப்பிடவில்லை] (ஓர் இந்தியப் பெண்மணி மற்றும் வெப்பமண்டல மரங்கள்)

1947
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2025-00034

1947 ஆம் ஆண்டில், குவான் ஷான்யூ தாய்லாந்து மற்றும் மலாயாவிற்கு இப்பகுதியிலிருந்து உந்துதல் தேடி பயணம் செய்தார். இது சிங்கப்பூர் குறித்த அவரது பதிவுகளையும் உள்ளூர் ஓவியச் சமூகங்களுடனான அவரது தொடர்புகளையும் பதிவு செய்யும் ஓர் அரிய படைப்பு. தெள்ளத் தெளிவான தூரிகை அசைவுகளுடன், குவான் ஓர் இந்தியப் பெண் பசுமையான பனை மரங்களுக்கு அடியில் நிற்பதைத் தெளிவாகச் சித்தரிக்கிறார், வெப்பமண்டலச் சூழலை உயிர்ப்பிக்கிறார். டிசம்பர் 1947 இல், குவான் அவ்வோவியத்தைச் சிங்கப்பூரில் உள்ள சீன ஓவியர்கள் சங்கத்திற்கு வழங்கினார். அவர் சக ஓவியரான வாங் லான்ருவோவுடன் (1911–2015) ஒரு கூட்டுக் கண்காட்சியிலும் பங்கேற்றார்.

லிங்னான் (Lingnan) பள்ளியின் இரண்டாம் தலைமுறையின் முன்னணி ஆசிரியராக குவான் இருந்தார். 1959 ஆம் ஆண்டில், சீன மத்திய அரசு, மாவோ சேதுங்கின் (Mao Zedong) "பனி" என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்ட "நமது ஆறுகள் மற்றும் மலைகளின் அழகு இதுதான்" என்ற நினைவுச்சின்ன இயற்கை நிலக்காட்சி ஓவியத்தை உருவாக்க குவான் (Guan) மற்றும் ஃபூ பாவோஷியைப் (Fu Baoshi) (1904–1965) பணியமர்த்தியது. இது 1949க்குப் பிந்தைய வரலாற்றில் ஒரு சின்னமான படைப்பாக மாறியது, அது, தொன்மையான மலை மற்றும் நீர் ஓவியங்கள் புதுப்பாணிக்கு மாறியிருப்பதை புரட்சிக் காதலியல் ஆடிவழியாகக் காட்டுகிறது.

ஃபேன் சாங் டியென்
(பிறப்பு 1907, சீனா; இறப்பு. 1987, சிங்கப்பூர்)

செட்டோ கீ
(பிறப்பு 1904, சீனா; இறப்பு. 1997, கனடா)

பான் ஷோ
(பிறப்பு 1911, சீனா; இறப்பு 1999, சிங்கப்பூர்)
குளிரில் நறுமண மணத்தெளிகை மற்றும் மையில் புதிய குறி

1985
காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

லீ சூ சீயின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2013-00242

இக்கூட்டுப்பணி சிங்கப்பூரின் மைச் சமூகத்திற்குள் நீடித்த பிணைப்புகளைப் பிரதிபலிக்கிறது. 11 ஜனவரி 1985 அன்று, ஃபேன் சாங் தியனின் (Fan Chang Tien) மாணவரான லீ சூ சீ (Lee Soo Chee), சீனாவிலிருந்து வந்த காங் செங் ஓவியச் சங்க உறுப்பினர்களுக்காக சுங் ஹ்வா (Chung Hwa) கலைக்கூடத்தில் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார், அதில் செட்டோ கீ (Szeto Kei) மற்றும் அவரது மாணவர்களும் அடங்குவர். அங்கு, அவர்கள் ஃபேன் மற்றும் பான் ஷோ போன்ற உள்ளூர் ஓவியர்களைச் சந்தித்து உரையாடினர். ஷாங்காய் பள்ளி மற்றும் லிங்னான் பள்ளியின் புகழ்பெற்ற மை ஆசிரியர்களான ஃபேன் மற்றும் செட்டோ, படைப்புக்கு மாறுபட்ட பாணிகளை வழங்கினர்: இக்சியி (xieyi) எனப்படும் கட்டற்ற, தன்னியல்பான தூரிகை வேலைப்பாட்டு முறையில் அமைந்த ஃபேனின் 'குளிர்கால-இனிப்பு' செடி, ஸ்செடோவின் துணிச்சலான, டாயிக்சியி (daxieyi) எனப்படும் தெளிவான சுருக்கப்பாணியில் வரையப்பட்ட பியோனி (peony) தோட்டச்செடியுடன் ஒத்துப்போகிறது. பானின் அழகெழுத்து வேலைப்பாடு இப்படைப்பை நிறைவு செய்கிறது. இப்படைப்பு, வேறுபட்ட நிலப்பரப்புக்கிடையில் நீடித்த அவர்களின் நட்பிற்கு ஒரு சான்றாகும்.

## பன்முனை கூடுநடுவம்

தென்கிழக்கு ஆசியா என்பது, மையின் அழகியல் உயிர்ப்புத்தன்மை தொடர்ந்து தன்னைத் தகவமைத்துக் கொண்டு, இனங்கலந்து, மீண்டும் புதுப்பித்துக் கொள்ளும் ஒரு சுறுசுறுப்பான பண்பாட்டுப் பரிமாற்றத் தளமாக இருந்து வருகிறது. புதுப்பாணியியலின் பல்வேறு உட்கூறுகளுக்கும் மையின் பல்வேறு நுழைவுப் புள்ளிகளுக்கும் தங்களை வெளிப்படுத்திக்கொண்ட ஓவியர்கள் புதிய காட்சி மொழிகளை உருவாக்கியுள்ளனர். லத்தீஃப் மொஹிதீன், ரிச்சர்ட் வாக்கர் (Richard Walker) மற்றும் பெர்னாண்டோ சோபல் (Fernando Zóbel) போன்ற சிலர், வெளிப்புறமாகப் பார்க்கிறார்கள், அவர்கள் மரபான சீன மை நடைமுறைகளுடன் விரிவான வழிகளில் ஈடுபடுகிறார்கள். ஹாங் ஜு ஆன் (Hong Zhu An) மற்றும் நுயான் மின் தான் (Nguyễn Minh Thành) போன்ற மற்றவர்கள் உள்நோக்கித் திரும்பி, நினைவிலும் மரபியலிலும் தங்கள் நடைமுறைகளை நிலைநிறுத்துகிறார்கள். இப்பிரிவில் உள்ள படைப்புகள் தொடர்ச்சி மற்றும் மாற்றத்தின் ஒரு மாறும் செயல்முறையைப் பிரதிபலிக்கின்றன, அங்கு மரபுகளின் மறுவேலையும் புதுப்பாணியியலுடனான ஈடுபாடும் பன்முக வெளிப்பாடுகளுக்கு வழிவகுக்கின்றன.

ரிச்சர்ட் வாக்கர்
(பிறப்பு 1895, ஐக்கிய இராஜ்ஜியம்; இறப்பு சுமார் 1989, ஐக்கிய இராஜ்ஜியம்)

இடது
காகடூ (Cockatoo)
1957
காகிதத்தில் மை மற்றும் நீர் வண்ணம்

வலது
முயல்
1957
காகிதத்தில் மை மற்றும் நீர் வண்ணம்

மறைந்த பெருமாட்டி டான் சுவீ நியோவின் குடும்பத்தினரிடமிருந்து பெற்ற பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2016-00157 | 2016-00156

ரிச்சர்ட் வாக்கர், மென்மையான துலக்குதல்கள் மற்றும் தெளிவான தூரிகை அசைவுகளைப் பயன்படுத்தி விலங்குகளைத் துல்லியமாகச் சித்தரிக்கிறார். ஐரோப்பிய நீர் வண்ண நுட்பங்களையும் சீன மை ஓவியக் கூறுகளையும் கவனமாகக் கலப்பதை வெளிப்படுத்துகிறார். இரண்டு வெவ்வேறு கலை வடிவங்களுக்கும் அழகியலுக்கும் இடையில் ஒரு நடுநிலைப் புள்ளியைக் கண்டுபிடிப்பதற்கான அவரது அணுகுமுறை, இத்தாலிய இயேசு சபையைச் சார்ந்த மதபோதகரும் குயிங் பேரரசர்களின் அரசவை ஓவியருமான கியூசெப் காஸ்டிகிலியோன் (Giuseppe Castiglione) (1688–1766) மற்றும் லிங்னான் பள்ளி மற்றும் ஷாங்காய் பள்ளியின் ஓவியர்கள் கையாண்ட வழிகளில் ஒன்றை நினைவூட்டுகிறது,

1923 முதல் 1952 வரை சிங்கப்பூரின் முதல் ஓவியக் கண்காணிப்பாளராக இருந்த வாக்கர் பல தலைமுறை ஓவியர்களை வளர்த்து வந்தார், மேலும் அவரது பங்களிப்புகளுக்காக பிரிட்டிஷ் பேரரசின் மிகச்சிறந்த ஆணை (OBE) வழங்கப்பட்டது. அவரது ஓய்வுக்குப் பிறகு வரையப்பட்ட இப்படைப்புகள், சிங்கப்பூர் மக்கள் மற்றும் மரபுகள் மீது வாக்கரின் தொடர்ச்சியான பாசத்தைப் பிரதிபலிக்கின்றன.

ஹாங் ஜூ ஆன்
(பிறப்பு 1955, சீனா)
செயலற்ற சிந்தனைகள்

2022
அரிசிக் காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2023-01395

ஹாங் ஜூ ஆன் (Hong Zhu An) ஒரு புகழ்பெற்ற புதுப்பாணியியல் மை ஓவியர் ஆவார், 1993 இல் சிங்கப்பூருக்குக் குடிபெயர்ந்த பிறகு அவரது ஓவியச் செயல்முறை ஒரு திருப்புமுனையைப் பெற்றது. 2019 மற்றும் 2022க்கு இடையில், அழகெழுத்துத் தூரிகை வேலைப்பாடுகள், மாறுபட்ட மைத் தொனிகள் மற்றும் அடுக்கு இழைவமைப்பு ஆகியவை ஹாங்கின் படைப்புகளுக்கு நடுவமாக இருந்தன. இம்முறையிலான கூறுகள், பார்வையாளரைத் தங்கள் கற்பனையால் இடத்தை நிரப்பவும், கடந்த கால மரபுகளுடன் இணைக்கவும் அழைக்கும் ஒரு படவடிவ, கவித்துவமான, தூண்டச்செய்கிற மண்டலத்தை உருவாக்குகின்றன. இப்படைப்பு, பண்டைய கல்வெட்டுகளின் சேதமடைந்த மற்றும் துண்டு துண்டான தேய்த்தல் தடங்களால் ஈர்க்கப்பட்ட இழைவமைப்பின் விளைவுகள் மற்றும் அழகியல் சுவைகளைப் பிரதிபலிக்கிறது, இதனைக் குறிப்பாக குயிங் (Qing) வம்சத்தின் பிற்பகுதியிலிருந்து சீன அறிஞர்கள் விரும்பி வருகின்றனர்.

ஹாங் ஜு ஆன்
(பிறப்பு 1955, சீனா)
50 ஆண்டுகளுக்கு முந்தைய எனது கனவு

2022
காகிதக் கூழில் 'செல் வினைல்' வண்ணப்பூச்சு

ஓவியரின் பரிசு
சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2023-01397

ஹாங் ஜு ஆன் தான் ஒரு குழந்தையாக இருந்தபோது ஓர் இரவில், மீன்கள் நிறைந்த ஒரு மரம் இருப்பதைக் கனவு கண்டார். அக்கனவைப் பற்றி தனது தாயிடம் சொன்னபோது, அக்கனவு நல்ல அதிர்ஷ்டத்தின் அடையாளம் என்று அவர் விளக்கினார். அக்காட்சி 50 ஆண்டுகள் அவருடனேயே இருந்தது. 2022 ஆம் ஆண்டு, சிங்கப்பூர் டைலர் அச்சுக் கழகத்தில் அவர் இரண்டாவது முறையாகப் பணியாற்றியபோது உருவாக்கப்பட்ட இப்படைப்பு, ஹாங்கின் முந்தைய அழகெழுத்துப்பாணி தூரிகை வேலைப்பாடுகளிலிருந்து வேறுபட்டது. இங்கே, அவர் தடிமனான காகிதக் கூழ், 'செல் வினைல்' (cel vinyl) வண்ணப்பூச்சு மற்றும் மை ஆகியவற்றைப் பயன்படுத்தி வேலை செய்கிறார், இதனால் சொட்டுகள், தடங்கள் மற்றும் தன்னியல்பான சைகைகள் ஆகியன படைப்புச் செயல்பாட்டில் ஆதிக்கம் செலுத்துகின்றன. கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு, இச்செயல்முறை நினைவாற்றல் மற்றும் கற்பனை வெளிப்படுவதற்கான இடத்தைத் திறக்கிறது.

டாங் டா வூ
(பிறப்பு 1943, சிங்கப்பூர்)

இடது
பாய்கிற நீர்

2009
காகிதத்தில் மை மற்றும் நிறமி

வலது
தாய்

2005
காகிதத்தில் மை

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2022-00583 | 2022-00581

சிங்கப்பூரின் சமகாலக் கலை வரலாற்றில் ஓர் அடையாளமாக விளங்கிய நபரான டாங் டா வூ, சமூக மற்றும் சுற்றுச்சூழல் சிக்கல்களைத் தீர்க்கும் பொது நிறுவல்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்குப் பெயர் பெற்றவர். 1980கள் மற்றும் 1990களில் தனது நிகழ்ச்சிகளின்போது மையை ஒரு வரைபொருளாக முதன்முதலில் ஆராய்ந்த போதிலும், 2000களுக்குப் பிறகுதான் அதை அவர் ஒரு முக்கிய ஊடகமாக முழுமையாக ஏற்றுக்கொண்டார். பள்ளியில் அழகெழுத்து வகுப்புகளில் கலந்துகொண்டதன் வழியாகவும், இக்கண்காட்சியில் சேர்க்கப்பட்டுள்ள மற்றொரு ஓவியரான ஃபேன் சாங் தியனின் (Fan Chang Tien) வகுப்புகளைக் கவனித்தும் சீன மையின் மரபுகளை அவர் தொடக்கத்தில் அறிந்துகொண்டார். ஆயினும்கூட, தனது மைப் படைப்புகளில், டாங் அறிந்தே மரபான தலைப்புப் பொருள்களுக்கு அப்பால் நகர்ந்தார்.

‘பாய்கிற நீர்' ஓவியத்தில், டாங் கண்களையும் கையையும் குறிக்க, தண்ணீரில் நனைத்த காகிதத்தின் குறுக்கில் மையை நகர்த்துகிறார். 'தாய்' படைப்பில், மை, தண்ணீர் மற்றும் காகிதம் ஆகியவை ஒன்றோடொன்று சேர்ந்துண்டாக்கும் விளைவு ஒரு மனித நிழலுருவை உருவாக்குகிறது. டாங்கின் தாயார் இறந்த பிறகு உருவாக்கப்பட்ட இப்படைப்பு, அவரது தனிப்பட்ட துயர உணர்வை வெளிப்படுத்துகிறது. இந்நீர்ம வடிவங்கள் உங்கள் நினைவுகளையோ அல்லது உணர்வுகளையோ எவ்வாறு கிளறக்கூடும்?

டாங் டா வூ (Tang Da Wu)
(பிறப்பு 1943, சிங்கப்பூர்)
அனைத்து ஓவியர்களையும் கொல்லுங்கள்

2009
காகிதத்தில் மை

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2022-00576

"அனைத்து ஓவியர்களையும் கொல்லுங்கள்" படைப்பில், கைத்துப்பாக்கியைப் பிடிக்கும் ஒரு கையின் வடிவமாகக் கறுப்பு மை உள்ளது, அதன் குழல் பார்வையாளரை நேரடியாக நோக்கி செலுத்தப்படுகிறது. சினமூட்டும் தலைப்பைக் கொண்டிருக்கும் இப்படைப்பு மோதலை ஏற்படுத்துவதாகவும், அச்சுறுத்துவதாகவும் இருக்கிறது. இதன் மூலம், டாங் டா வூ ஓவியச் சுற்றுச்சூழல் அமைப்பு குறித்து கூர்மையான விமர்சனத்தை வழங்குகிறார், 1995 ஆம் ஆண்டு வரையப்பட்ட அவரது புகழ்பெற்ற "ஓவியங்களுக்குப் பணம் கொடுக்காதீர்" படைப்பின் கருத்தை எதிரொலிக்கிறார். அதில் அவர் 'சிங்கப்பூர் ஆர்ட் 95' கண்காட்சியின் தொடக்கத்தில் அப்போதைய அதிபர் ஓங் டெங் சியோங்கிடம் (Ong Teng Cheong) "ஓவியங்களுக்குப் பணம் கொடுக்காதீர்கள்" என்ற வாசகங்கள் கொண்ட தனது மேலங்கியை அணியலாமா என்று கேட்டார். அதிபரின் ஒப்புதலுடன், டாங் அவ்வாறு செய்து, ஓங்கிடம் கையால் எழுதப்பட்ட ஒரு குறிப்பைக் கொடுத்தார், அதில்: "நான் ஓர் ஓவியன். நான் முக்கியமானவன்." என எழுதப்பட்டிருந்தது.

இங்கே, டாங் "பேரளவிலான" கண்காட்சிகளின் அவசியத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார், அவை ஓவியர்களின் குரல்களை அடக்குகின்றன என்று வாதிடுகிறார். இந்த விமர்சனக் கண்ணோட்டம் டாங்கின் ஓவிய அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது. 2024 நேர்காணலில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

ஓவியர்கள் ஒவ்வொரு நாளும் - முதலில் தங்களுக்கு எதிராகவும், பின்னர் தங்கள் சூழலுக்கு எதிராகவும் - கலகம் செய்கிறார்கள். கலகம் செய்வது என்பது தொடர்ந்து முன்னேறுவதாகும். நான் தினமும் கலகம் செய்கிறேன், இதுவே எனது படைப்பு உந்துதலின் மூலமாகும்.

நுயான் மின் தான் (Nguyễn Minh Thành)
(பிறப்பு 1971, வியட்நாம்)
காத்திருத்தல்

2001
'டோ' (*dó*) காகிதத்தில் மை மற்றும் வண்ணம்

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2011-00641

நுயான் மின் தான் (Nguyễn Minh Thành), தனது தன்னாய்வு ஓவியங்கள் மற்றும் வரைபொருள்களை ஆய்வு முறையில் பயன்படுத்துவதற்காக, குறிப்பாக மரபான, கையால் செய்யப்பட்ட வியட்நாமியக் காகிதமான 'டோ'வில் (*dó*) மையை வைத்து ஆய்வு செய்ததற்காக அறியப்படுகிறார். 1996 ஆம் ஆண்டு ஹனோய் (Hanoi) நுண்கலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர், ட்ரூங் டானின் (Truong Tân) (பிறப்பு 1963, வியட்நாம்) வழிகாட்டுதலின் கீழ் புதிய வடிவங்களை ஆராயும் இளம் ஓவியர்களின் தலைமுறையில் அங்கம் வகித்தார்.

பேரளவிலான இம்மூவூடகப் படைப்பில், நடுவில் உள்ள தொப்பி அணிந்த உருவம் நுயெனின் தன்னுருவப்படமாகும். சற்று விலகிப் பார்த்தவாறு, அவரது பார்வை உள்நோக்கித் திரும்பி, உணர முடியாத அளவுக்கு இருந்தது. அதன் இருபுறமும், அதே உருவத்தின் இரட்டை நிழலுருக்கள், இலகுவான மைத் துடைப்புகளில், தன்னிழல் போலத் தோன்றுகின்றன.

பெர்னாண்டோ சோபெல் (Fernando Zóbel)
(பிறப்பு 1924, பிலிப்பைன்ஸ்; இறப்பு. 1984, இத்தாலி)
கிராபடோ ஐ

1958
கித்தானில் எண்ணெய்

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு
2012-00720

கிராபடோ I இல் உள்ள சிக்கலான கோடுகள் தன்னியல்பாகத் தோன்றலாம், ஆனால் ஒவ்வொன்றும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஒரு முக்கியப் புதுப்பாணி ஓவியரான ஃபெர்னாண்டோ சோபலால் மிக நுணுக்கமாக வரையப்பட்டது. ஊசி இல்லாத மருந்தேற்றுகுழல் ஒன்றை மீண்டும் பயன்படுத்தி, சோபலால் கித்தான் முழுவதும் நீண்ட, தொடர்ச்சியான கோடுகளை உருவாக்க வண்ணப்பூச்ரின் ஓட்டத்தை கட்டுப்படுத்த முடிந்தது. இப்படைப்பு அழகெழுத்தின் செல்வாக்கைப் பிரதிபலிக்கிறது.

சீன மற்றும் ஜப்பானிய ஓவியங்களைப் படித்து, அழகெழுத்துக் கலையைக் கற்றுக்கொண்டதன் மூலம், ஆசிய அழகியல் மீது சோபெல் நீடித்த ஆர்வத்தைக் காட்டினார். அவர் புதுப்பாணியியல் மற்றும் கிழக்காசிய ஓவிய வகுப்புகளைக் கற்பித்தார், மேலும் லியு குவோ-சங் (Liu Kuo-sung) (பிறப்பு 1932, சீனா) போன்ற ஆசிய மை ஓவியர்களின் படைப்புகளையும் சேகரித்தார்.

நேனா சாகுயில் (Nena Saguil)
(பிறப்பு 1914, பிலிப்பைன்ஸ்; இறப்பு. 1994, பிரான்ஸ்)

இடது
தலைப்பில்லாதது

1963
காகிதத்தில் மை

வலது
தலைப்பில்லாதது

1962
காகிதத்தில் மை

சிங்கப்பூர் தேசியக் கலைக்கூடத்தின் திரட்டு

மாரா (Mara) மற்றும் நிக்கோல் கோசனின் (Nicole Coson) தாராளமான ஆதரவால் இக்கையகப்படுத்தல் சாத்தியமானது.

காகித ஊடகத்தில் பேனாவும் மையும் தான் நேனா சாகுயிலின் (Nena Saguil) அடையாள ஊடகம் ஆகும், அதை அவர் மிகவும் தேவைகொண்டதாகக் கருதினார். இப்படைப்பில், சாகுயிலின் நுட்பமான வரிகளும் மைக் கழுவல்களும் ஒரு கனவு போன்ற நீர்மத்தன்மையைத் தூண்டி, பார்வையாளரை உணர்ச்சிகளின் நெருக்கமான பகற்கனவுக்கு அழைக்கின்றன. இருப்பினும், இந்நுட்பமான தரத்தின் கீழ் கடுமையான ஒழுக்கம் உள்ளது. ஒவ்வொரு வரியிலும் புள்ளியிலும் துல்லியத்தை சாகுயில் (Saguil) வலியுறுத்தினார், இலக்கணம் மற்றும் நிறுத்தற்குறிகளில் ஓர் எழுத்தாளருக்கு இருக்கும் உன்னிப்பான கவனத்துடன் அதை அவர் ஒப்பிட்டார்.

பிலிப்பைன்ஸிலும் பின்னர் பாரிஸிலும் முறையாகப் பயிற்சி பெற்ற சாகுயிலின் அணுகுமுறை அமைதியான சிந்தனையுடன் இருந்தது, அது, கலை நம்மை ஓர் ஆழமான, ஆன்மீக உலகத்துடன் இணைக்கிறது என்ற ரஷ்ய ஓவியர் வாஸ்லி காண்டின்ஸ்கியின் (Wassily Kandinsky) (1866–1944) நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டதாகும். நிறத்தைக் கைவிட்டு, சாகுயில் ஒளிபுகாநிலைக்கும் ஒளிர்வுக்கும் இடையிலான நுட்பமான சமநிலையை ஆராய்ந்தார், ஒவ்வொரு தூரிகையடிப்பியிலும் உணர்ச்சியை வழிநடத்தினார். இதன் விளைவு பெரும்பாலும் ஓர் அறிதுயில் உள்ளகமாக இருந்தது. இவ்விரண்டு

படைப்புகளும் பாரிஸில் வரையப்பட்டன, அங்கு சாகுயில் 1950 களில் இருந்து 1994 இல் இறக்கும் வரை வாழ்ந்தார்.

லத்தீஃப் மொஹிதீன்
(பிறப்பு 1941, மலேசியா)

இடமிருந்து வலமாக
குய்லின் (10)

1990
காகிதத்தில் மை மற்றும் நீர் வண்ணம்

குய்லின் (9)

1990
காகிதத்தில் மை, நிறமி மற்றும் நீர் வண்ணம்

குய்லின் (8)

1990
காகிதத்தில் மை, நிறமி மற்றும் நீர் வண்ணம்

குய்லின் (7)

1990
காகிதத்தில் நிறமி மற்றும் நீர் வண்ணம்

டார்க் லேண்ட்ஸ்கேப்

**1998**
காகிதத்தில் க்ரேயான்**,** வாட்டர்கலர்**,** பிளாங்கோ மற்றும் மை

ரிம்பா

**1994**
காகிதத்தில் வாட்டர்கலர் மற்றும் க்ரேயான்

டார்க் ரிம்பா

**1998**
காகிதத்தில் வாட்டர்கலர்**,** க்ரேயான்**,** பிளாங்கோ மற்றும் மை

YLY திரட்டின் பரிசு
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்தின் திரட்டு
2009-03533 | 2009-03532 | 2009-03531 | 2009-03530 | 2013-00211 | 2013-00193 | 2013-00212

1990 ஆம் ஆண்டில், லத்தீஃப் மொஹிதீன் சீனாவின் குய்லினுக்குச் சென்று, சீன இயற்கை நிலக்காட்சி ஓவியத்தின் மரபையும் அதன் வரலாற்றையும் உணர்வியலாக உள்ளடக்கிய தனது முதல் மை அடிப்படையிலான வரைபடங்களை உருவாக்கினார். பசுமையான, வளைந்து செல்லும் ஆறுகளிலிருந்து எழும்பி நிற்கும் உயரமான சுண்ணாம்புக் கல் சிகரங்களைக் கொண்ட, வியத்தகு அரிமான நிலப்பரப்புகளுக்கு ‘குய்லின்’ பிரபலமானது. பரந்த காட்சிகளுக்குப் பதிலாக, லத்தீஃப் அதன் மலைகளில் கவனம் செலுத்தத் தேர்ந்தெடுத்தார். இப்படைப்புகளில், ஈரமான மற்றும் உலர்ந்த தூரிகை அசைவுகள், கடுமையான வரி வேலைப்பாடுகள் மற்றும் அவ்வப்போதைய வண்ணத் தொடுதல்கள் ஆகியவற்றின் கலவையைப் பயன்படுத்தி அவற்றின் வடிவங்கள், கோடுகள், அமைப்பு மற்றும் மனநிலைகளை அவர் வடிவுபெயர்த்தார். இயற்கையின் அடிப்படை அம்சங்களை ஆராயும் இருள் இயற்கை நிலக்காட்சி மற்றும் ரிம்பா (மலாய் மொழியில் "காடு") தொடர்கள் உள்ளிட்ட அவரது பிற்காலப் படைப்புகளில் இந்த அணுகுமுறையை அவர் கொண்டு வந்தார்.

லத்தீஃப் ஒரு புகழ்பெற்ற மலேசிய ஓவியர், அவர் 1950களில் சிங்கப்பூரில் தனது ஓவியப்பயிற்சியைத் தொடங்கினார். அவர் பிரிட்டிஷ் கவுன்சிலில் படித்தார், அங்கு லியு காங் (Liu Kang) அவரது ஆசிரியர்களில் ஒருவராக இருந்தார். 1960களில், லத்தீஃப் பெர்லினில் உள்ள நுண்கலைப் பல்கலைக் கழகத்தில் படித்தார் மற்றும் பாரிஸ் மற்றும் நியூயார்க்கில் குறுகிய கால ஓவியக் குடியிருப்புகளை மேற்கொண்டார். ஓவிய உருவாக்கத்துக்கும் படைப்பகச் செய்முறைக்குமான ஒரு பொருளாக அவர் மையை ஆராய்ந்தது பெர்லினில்தான்.